## சுற்றாடல் அமைச்சு

## கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தில் ஆரம்ப – திறன் அல்லாத சேவைப் பிரிவின் கள உதவியாளர் (மேற்பார்வை) பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல் – 2026

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் ஆரம்ப – திறன் அல்லாத சேவைப் பிரிவில் உள்ள கள உதவியாளர் (மேற்பார்வை) பதவிகளுக்கான 11 வெற்றிடங்களை நிரப்புவதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :**

(I) **கல்வித் தகைமை:**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(II) **அனுபவம்:**

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் ஆரம்ப – திறன் அல்லாத சேவைப் பிரிவில் கள உதவியாளர் பதவியில் 10 வருடங்களுக்கான நிரந்தரமான, தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(III) **உடற் தகைமை:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் தேவையான நல்ல உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

(V) **ஏனையவை:**

(அ) விண்ணப்பதாரர்கள் சிறந்த நற்பண்பும் நன்னடத்தையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

(ஆ) கடந்த ஐந்து வருடங்களில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல், சம்பள உயர்வுகளைப் பெற்றிருத்தல் மற்றும் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் பணித்திறனை வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(இ) பதவிக்கு நியமனம் பெறுவதற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(VI) **வயது:** பொருந்தாது.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக, மாதாந்த சம்பள அளவுத்திட்டம் : ரூ. 40,000.00 – 10 × 450 – 10 × 490 – 10 × 540 – 12 × 590 – ரூ. 61,880.00 (PL 1 – 2025) ஆகும்.

04. சேவையில் நியமிக்கப்படுவதற்கான பொதுவான விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்

(அ) கள உதவியாளர் (மேற்பார்வை) பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்களின் பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியத்துக்கு உரித்துடையதாகும். (ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்.)

(ஆ) ஒரு வருட பரீட்சார்த்த சேவைக் காலத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(இ) பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் மூன்று (03) வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(ஈ) தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

05. **பதவிகளுக்கான தெரிவு முறை :**

இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கும் அலுவலர்களில், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் கள உதவியாளர் பதவியில் நிரந்தரமான, தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். அந்த நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் வரிசைப்படி, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அலுவலர்கள் நியமிக்கப்படுவர். கள உதவியாளர் (மேற்பார்வை) பதவிக்கு நியமனம் பெறுவதற்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் குறைந்தபட்சம் 55 புள்ளிகளைப் பெற வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படும்:

| *இல.* | *மதிப்பீடு செய்யப்படும் துறை* | *அதிகபட்ச புள்ளிகள்* | *சித்தியடைய வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | சேவை அனுபவம் | 40 | 55 (01–04) |
| 02 | **அனுபவம்** – கடலோரப் பாதுகாப்புப் பணித்தளங்களில் பெற்றுள்ள அனுபவம் (கற்சுவர்/கல் தடுப்புகள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு தொடர்பான அறிவு – வாய்மொழிப் பரீட்சையின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்) | 15 | |
| 03 | இயந்திர உபகரணங்கள் மற்றும் கனரக வாகனங்கள் தொடர்பான அறிவு | 10 | |
| 04 | இயந்திர உபகரணங்களைப் பராமரித்தல் மற்றும் இயக்குதல் தொடர்பான அறிவு | 10 | |
| 05 | கடலோரப் பாதுகாப்புப் பணிகளின்போது பொறுப்புகளை ஏற்றுச் செயலாற்றியமை | 20 | |
| 06 | ஆளுமை | 05 | |
| | மொத்தம் | 100 | |

06. **விண்ணப்பிக்கும் முறை :**

இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2026.10.05 அன்று அல்லது அதற்கு முன்னர், "பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம், த.பெ. 556, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாகக் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் "கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் கள உதவியாளர் (மேற்பார்வை) பதவியை நிரப்புதல்" என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்களும், முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைத் தங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.)

07. **தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் :**

(அ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கத் தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள், ஆவணங்கள் மூலம் தங்களது தகைமைகளை நிரூபிக்க வேண்டும்.

(ஆ) நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களின் அசல் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

1. பிறப்புச் சான்றிதழ்.
2. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
3. தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.
4. கள உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட கடிதம்.
5. கள உதவியாளர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட கடிதம்.
6. ஏனைய தொடர்புடைய சான்றிதழ்கள்

08. **தவறான தகவல்களை வழங்குதல் :**

விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது என்பது நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், அவரது/அவருடைய விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவல்கள் நியமனத்திற்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதற்குரிய சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டு, அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

09. **ஏனைய விடயங்கள் :**

இந்த விதிமுறைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் தொடர்புடைய விடயம் இருப்பின், அது கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் விருப்பத்திற்கிணங்க தீர்மானிக்கப்படும்.

இந்த அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழிப் பதிப்பே மேலோங்கும்.

பேராசிரியர் பி.பி. டர்னி பிரதீப் குமார,
பணிப்பாளர் நாயகம்.

கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ திணைக்களம்,
த.பெ. 556,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை, கொழும்பு 10.
2026.09.04